# வாலாஜாபேட்டை நகராட்சி
# வேலூர் மாவட்டம்
# திடக்கழிவு மேலாண்மை விதிகள் குறித்து அறிவிக்கை
# ( வாலாஜாபேட்டை நகர மன்ற தீர்மானம் எண்.86, நாள்.28.6.2013)

நகராட்சி திடக்கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள் 2000இன் விதி4(3)ஷெட்யூல் 1ல் பாரா 1(2)ன் கீழ் இயற்றப்படும் துணை விதிகள்

நகராட்சிப் பகுதியில் குப்பைகள் மற்றும் திடக்கழிவுகள் சேகரித்து அப்புறப்படுத்துதல் குறித்து துணை விதிகள்

1. வாலாஜாபேட்டை நகராட்சிக்குட்பட்ட பகுதிகள் குடியிருப்புப் பகுதியில் சேரும் குப்பைகள் மற்றும் திடக்கழிவுகளை சாலை ஓரஙகளிலோ, தெரு ஓரஙகளிலோ அல்லது கால்வாய்களிலோ வீசி எறியக்கூடாது.
2. ஒவ்வொரு வீட்டிலும் சேரும் குப்பைகள் மற்றும் திடக்கழிவுகள் அதற்கென ஒரு குப்பைக்கூடை அல்லது பைகளில் சேகரித்து வைத்திருந்து நகராட்சி துப்புரவுப் பணியாளர்கள் வரும்போது அவர்களிடம் சேர்ப்பிக்கவேண்டும்.
3. பல மாடிக் கட்டிடஙகள், அடுக்கு மாடிக் குடியிருப்புகளில் கூடுதலான எண்ணிக்கையில் அவ்வீட்டு உரிமைதாரரால், குப்பை கூடைகளை கீழே கொண்டு வந்து கொடுக்க வேண்டும்.
4. வீடுகளில் சேரும் குப்பைகளில் மக்கிப்போகும் உணவுப் பொருட்கள் கழிவுகளை தனியாகவும் மக்கிப் போகாத கழிவுகளை தனியாகவும் வைக்கவேண்டும்
5. வணிக வளாகஙகள் , வியாபார நிறுவனஙகள், கடைவீதிகள் அடஙகிய பகுதிகளில் ஒவ்வொரு நிறுவனஙகள் மற்றும் சிறு தொழிற்சாலைகள் மற்றும் கடைகளில் சேரும் குப்பைகள் திடக்கழிவுகளை சாலைகளில் வீதிகளில் எரியாமல் குப்பைக் கூடைகள் அல்லது பைகளில் சேகரித்து வைத்து நகராட்சி துப்புரவுப்பணியாளர்கள் வரும்போது அவர்களிடம் சேர்ப்பிக்கவேண்டும்.
6. திருமண மண்டபஙகள் , தஙகும் விடுதிகள், ஒட்டல்கள் , தேனீர் விடுதிகள் , திரையரஙகுகள் நடத்துவோர் தஙகள் சொந்தப் பொறுப்பில் குப்பைகளை திடக்கழிவுகளை அகற்ற ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும் அல்லது நகராட்சிக்கு விண்ணப்பித்து அதற்குரிய சேவைக்கட்டணம் செலுத்தி நகராட்சி துப்புரவுப்பணியாளர்கள் வரும்போது அவர்களிடம் சேர்க்கப்பட வேண்டும்.
7. சாலை ஓரஙகளில் தற்காலிகக் கடைகள் வைத்து வியாபாரம் செய்பவர்கள் இரவு நேரஙகளில் வியாபாரம் செய்பவர்கள், கழிவுகளை தஙகள் சொந்தப் பொறுப்பில் அகற்ற வேண்டும். சாலைகளில் எக்காரணத்தைக் கொண்டும் கழிவுகளை எறியக்கூடாது. சாலை ஒரஙகளில் தற்காலிகக் கடைகள் இரவுக்கடைகள் நடத்துபவர்கள், நகராட்சிக்கு விண்ணப்பித்து அதற்குரிய சேவைக் கட்டணம் செலுத்தி நகராட்சி துப்புரவுப்பணியாளர்களைக் கொண்டு அப்புறவுப்படுத்த ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்.
8. மருத்துவமனைகள், கிளீனிக் நடத்துபவர்கள் தஙகளது கழிவுகளை மற்ற கழிவுகளுடன் கலந்து தெருவில் எறிவதோ அல்லது குப்பை தொட்டிகள் அல்லது குப்பைவண்டிகளில் சேர்க்கக்கூடாது. மருத்துவமனகள் கழிவுகளை அகற்றுவதற்கு செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகளை நகராட்சிக்கு மாதம் ஒரு முறை தெரிவிக்கவேண்டும்.

9. நகராட்சி எல்லைக்குள் உள்ள சிறு மற்றும் பெரிய தொழிற்சாலைகள், வாகனங்கள் பணிமனைகள் மெக்கானிக் மெஷினரி ஒர்க் ஷாப்புகள், ஆயில், அரிசி மாவு மில்கள் ஆகியவற்றிலிருந்து வெளியேற்றப்படும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்ட கழிவுகளை மட்டும் நகராட்சியிடம் அனுமதி பெற்று நகராட்சி குப்பை கொட்டும் தளத்தில் அவர் தம் சொந்த பொறுப்பில் சேர்ப்பிக்கப்படவேண்டும். நகராட்சி மூலம் அப்புறப்படுத்தும்பட்சத்தில் அதற்கான சேவைக் கட்டணம் செலுத்தினால் நகராட்சி துப்புரவுப்பணியாளர்களால் அப்புறப்படுத்தப்படும். (மேற்கண்ட பணியில் கட்டணம் செலுத்தியவுடன் முன்னுரிமை வழஙகப்படமாட்டது)

10. இறைச்சிக் கடை நடத்துபவர்கள் மற்றும் கோழி இறைச்சி விற்பனை செய்பவர்கள் தன் சொந்தப் பொறுப்பில் நகராட்சி குப்பை கொட்டும் தளத்திற்கு கொண்டு செல்ல வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் கழிவு நீர் கால்வாய், ஏரி, குளம், குட்டை ஆகிய பகுதிகளில் கொட்டக்கூடாது. ( மீறி கொட்டுபவர்கள் மீது ரூ.500 அபராதமும் காவல் துறை மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்) அவ்வாறு செய்ய இயலாதவர்கள் நகராட்சிக்கு விண்ணப்பம் செய்து அதற்கான சேவை கட்டணம் செலுத்தினால் நகராட்சி துப்புரவுப்பணியாளர்களால் அப்புறப்படுத்தப்படும்.

11. நகராட்சி அஙகாடியில் மீன், ஆட்டு இறைச்சி , கோழி இறைச்சிக் கடைகள் நடத்த ஏலம் எடுத்தவர்கள் கடைகளில் சேரும் கழிவுகள் நகராட்சி துப்புரவுப் பணியாளர்கள் மூலம் அப்புறப்படுத்தப்படும்.

12. நகராட்சி தினசரி / வாரச்சந்தைக்கு கொண்டு வரும் காய்கறிகள், கனி வகையால் ஏற்படும் (அழுகும் பொருட்கள்) கூடுதல் குப்பைகள் அப்புறப்படுத்த நகராட்சியால் நிர்ணயிக்கப்படும் சேவைக் கட்டணத்தை செலுத்த வேண்டும்.

13. சேவைக் கட்டணம் மாதம் ஒரு முறை செலுத்தப்பட வேண்டும்.

**வாலாஜாபேட்டை நகராட்சி**

**திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி கீழ்கண்டுள்ளவாறு சேவை கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு செலுத்தப்பட வேண்டிய விபரம்.**

| வ.எண் | விபரம் | காலம் | சேவைக்கட்டணம் செலுத்தப்பட வேண்டிய தொகை. ரூ. |
|---|---|---|---|
| 1 | திருமண மண்டபம் | திருமணம் ஒன்றுக்கு | 375 |
| 2 | திருமண மண்டபம் | நாள் நிகழ்ச்சிக்கு | 225 |
| 3 | பெரிய ஒட்டல்கள் | மாதம் ஒன்றுக்கு | 750 |
| 4 | சிறிய ஒட்டல்கள் | மாதம் ஒன்றுக்கு | 375 |
| 5 | சிறிய டீக்கடை | மாதம் ஒன்றுக்கு | 150 |
| 6 | மாமிச இறைச்சி கடைகள் | | |
| | 1) ஆட்டு இறைச்சி கடை | மாதம் ஒன்றுக்கு | 188 |
| | 2) மாட்டு இறைச்சி கடை | மாதம் ஒன்றுக்கு | 150 |
| | 3) கோழி இறைச்சி கடை | மாதம் ஒன்றுக்கு | 225 |
| 7 | 1) மொத்த காய்கறி கடை மண்டி பெரியது | மாதம் ஒன்றுக்கு | 225 |
| | 2) மொத்த காய்கறி கடை மண்டி சிறியது | மாதம் ஒன்றுக்கு | 150 |
| 8 | மளிகை மொத்த வியாபாரம் | மாதம் ஒன்றுக்கு | 375 |
| 9 | 2) டிபர்மெண்ட் ஸ்டோர் | மாதம் ஒன்றுக்கு | 375 |
| | 3) மளிகை கடை சில்லறை வியாபாரம் | மாதம் ஒன்றுக்கு | 75 |
| 9 | ஜவுளி கடை பெரியது | மாதம் ஒன்றுக்கு | 750 |
| | 2) ஜவுளி கடை சிறியது | மாதம் ஒன்றுக்கு | 375 |
| 10 | இனிப்பு கடைகள்(பேக்கரி உட்பட) | மாதம் ஒன்றுக்கு | 225 |
| 11 | தனியார் மருத்துவமனைகள் | மாதம் ஒன்றுக்கு | 750 |
| 12 | மர இழைப்பகஙகள் மற்றும் மூஙகில் கொண்டு செய்யும் பொருட்கள் கடைகள் | மாதம் ஒன்றுக்கு | 225 |
| 13 | நகராட்சி எல்லையில் உள்ள இதர நிறுவனஙகளுக்கு சராசரி கட்டணம் | மாதம் ஒன்றுக்கு | 75 |
| 14 | மருந்து கடைகள் | மாதம் ஒன்றுக்கு | 150 |
| 15 | பூக்கடை (வணிக வளாகம் மட்டும்) | மாதம் ஒன்றுக்கு | 225 |

14 வீடுகள், திருமண மண்டபங்கள், தஙகும் விடுதிகள், ஒட்டல்கள் , திரையரஙகுகள், ஜின்னிங பேக்டரிகள், ஆயில், அரிசி மாவு மில்கள் மற்றும் வர்த்தக நிறுவனஙகள் அமைக்கப்பட்டுள்ள நச்சுத் தடை தொட்டியிலிருந்து தனியார் வாகனஙகள் மூலம் அப்புறப்படுத்தப்படும் மலம் மற்றும் கழிவு நீரை நகராட்சி குப்பைகள் கொட்டும் தளத்தில்தான் ஊற்றப்படவேண்டும். (மீறினால் ரூ.500 அபராதம் விதிக்ககப்படும், காவல் துறை மூலம் நடவடிக்கை மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலர் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்)

15 மேற்கண்டுள்ளவாறு நகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணம் பிரதி மாதம் 1 முதல் 10ந்தேதி வரை செலுத்தப்படவேண்டும். 10ந்தேதி விடுமுறை நாளாக இருந்தால் அடுத்து வரும் பணி நாளில் அபராதம் இல்லாமல் வசூலிக்கப்படும். குறிப்பிட்ட நாட்களுக்குள் செலுத்த தவறினால் சேவைக்கட்டணத்தில் 50 சதவிகிதம் கூடுதலாக வசூலிக்கப்படும்.

16 வாலாஜாபேட்டை நகராட்சிப் பகுதியில் தெருக்கள் அல்லது சாலைகளில் ஒரு துப்புரவுப் பணியாளர்கள் மூலம் அகற்றக்கூடிய அளவுக்கு குப்பைகள் அல்லது திடக்கழிவுகளை போட்டால் மேற்படி நபருக்கு ரூ 100/– நிர்வாக செலவாக வசூலிக்கப்படும்

17 தொழில்முனைவோர், வியாபாரிகள் மற்றும் அடுக்குமாடி குடியிருப்புகள் , திருமண, சடஙகு, காதுகுத்து, இறந்தவர்களுக்கு வழிபாடு மற்றும் எந்த விசேஷ நிகழ்ச்சிகள் நடத்துபவர்கள் அதற்கென விதிக்கப்பட்டுள்ள விதிமுறைகளை பின்பற்றாமல் சாலைகளில் அல்லது தெரு ஒரஙகளில் குப்பைகள் அல்லது திடக்கழிவுகளைக் கொட்டி அதனை ஒன்றுக்கு மேற்பட்ட நகராட்சி துப்புரவுப்பணியாளர்களைக் கொண்டோ அல்லது வாகன உதவி கொண்டோ அகற்றக்கூடிய அளவுக்கு குப்பைகள் அல்லது திடக்கழிவுகளைப் போட்டால் அவ்வாறான ஒவ்வொரு நிகழ்வுக்கும் அதற்கான நிர்வாக செலவினமாக ரூ 500/–வசூலிக்கப்படும்.

18 நகராட்சிப் பகுதிகளில் கட்டிடஙகளை இடித்து குவிக்கப்படும் இடிபாடு கழிவுப்பொருட்களை கட்டிடம் கட்டி இடிக்கப்பட்ட 24மணி நேரத்திற்குள் உரிமையாளர் சொந்தப் பொறுப்பில் அப்புறவுப்படுத்திக்கொள்ள வேண்டும். தவறினால் 10 சதுரமீட்டருக்கு ஒரு நாளைக்கு ரூ.100/– வீதம் வாடகை வசூலிக்கப்படும்.

19 விதிகள் 16,17,18 மற்றும் 19ல் கூறப்பட்டுள்ள நிர்வாக செலவு, மற்றும் வாடகையை வசூல் செய்து நகராட்சியில் செலுத்த நகராட்சி உதவிப் பொறியாளர்,குடிநீர் விநியோக பணி மேற்பார்வையாளர், துப்புரவு ஆய்வாளர்கள், வருவாய் ஆய்வர்கள், நகரமைப்பு ஆய்வாளர் மற்றும் வருவாய் உதவியாளர்கள் ஆகியோருக்கு முழு அதிகாரம் அளிக்கப்படும்.

20 விதிகள் 15,16,17,18 மற்றும் 19 ஆகியவற்றின் படி கட்டணம் செலுத்தத் தவறியவர்கள் மீது நகராட்சி சட்ட விதிகளின்படி சொத்துவரி செலுத்தாதவர்கள் மீது எடுக்கப்படும் நடவடிக்கை போன்று மேற்கொள்ளப்படும்.

21. மேற்கண்ட துணைவிதிகள் அனைத்தும் மாவட்ட அரசிதழில் வெளியிட்ட நாள் முதல் அமுலுக்கு வருகிறது.

W.S.வேதகிரி,
நகர மன்ற தலைவர்,
வாலாஜாபேட்டை நகராட்சி

ந.சஙகரன்,
ஆணையாளர்,
வாலாஜாபேட்டை நகராட்சி